# அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம் (RMSA)

## தேர்வு - 1

பத்தாம் வகுப்பு] **தமிழ் - இரண்டாம் தாள்** [காலம் : 2-30 மணி

(மொத்த மதிப்பெண்கள் : 100)

(இலக்கணம், துணைப்பாடம், கடிதம், கட்டுரை, மொழிப்பயிற்சி)

பிரிவு-I (மதிப்பெண்கள் : 20)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

பகுதி - 1

உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக : 5x1 =5

1. முஃடீது - இச்சொல்லில் பயின்று வந்த குறுக்கம்
   அ) ஐகாரக் குறுக்கம் ஆ) ஔகாரக் குறுக்கம் இ) ஆய்தக் குறுக்கம்
2. படித்து வந்தான் - இதில் படித்து என்பது ------ ஆகும்.
   அ) பெயரெச்சம் ஆ) வினையெச்சம் இ) வினைமுற்று
3. நிரை கவர்தல் என்பது ------.
   அ) வெட்சி ஆ) நொச்சி இ) கரந்தை
4. திருமால் ----- நிலத்திற்குரிய தெய்வம்
   அ) குறிஞ்சி ஆ) மருதம் இ) முல்லை
5. உலகு என்னும் சொல் வெண்பாவின் ஈற்றடியின் ஈற்றுச் சீராயின் அதன் வாய்பாடு ------ ஆகும்.
   அ) நாள் ஆ) பிறப்பு இ) காசு

www.Padasalai.Net

பகுதி - 2

கோடிட்ட இடத்தை நிரப்புக : 5x1 =5

6. விடை ------ வகைப்படும்.
7. வெண்பாவின் ஓசை ------- ஆகும்.
8. மலரன்ன சேவடி - இச்சொல்லில் ----- என்பது உவம உருபாகும்.
9. வெற்றிபெற்ற மன்னனைப் பாடுவது ----- திணையாகும்.
10. அணி என்னும் சொல்லுக்கு ---- என்று பொருள்.

பகுதி - 3

சுருக்கமாக விடையளிக்க : 10x1=10

11. வல்லினம் மிகும் இடம் - சான்று தருக.
12. நடி - இச்சொல்லைப் பெயரெச்சமாக்குக.
13. இமயமலை மிகவும் உயரமானது - உணர்ச்சி தொடராக மாற்றுக.
14. ஒருமைப் பன்மை பிழை நீக்கி எழுதுக : இன்று பேருந்துகள் ஓடாது.
15. கீழ்க்காணும் தொடரிலுள்ள சந்திப் பிழைகளை நீக்கி எழுதுக :
    கைதொழில் ஒன்றை கற்று கொள்
16. வழூஉச் சொற்களை நீக்கி எழுதுக : வலதுபக்கச் சுவற்றில் எழுதாதே
17. கீழ்க்காணும் தொடரில் அமைந்துள்ள பிறமொழிச் சொல்லுக்கு உரிய தமிழ்ச்சொற்களை எழுதுக :
    நான் இந்த காலேஜின் ஓல்டு ஸ்டூடன்ட்

(திருப்புக

18. நானிலம் - இச்சொல்லை விரித்தெழுதுக.
19. பொருத்தமான நிறுத்தற் குறியிட்டு எழுதுக :
கணிதம் அறிவியல் வணிகவியல் பொருளியல் வரலாறு முதலானவை இளங்கலை படிப்புகளாகும்.
20. கீழ்க்காணும் அடிக்கோடிட்ட மரபுத் தொடர் குறிக்கும் பொருளை எழுதுக :
எம்.ஜி. இராமச்சந்திரன் திரைவானில் கொடிகட்டிப் பறந்தார்.

## பிரிவு-II (மதிப்பெண்கள் : 10)

கீழ்க்காணும் வினாக்களுள் ஏதேனும் ஐந்தனுக்கு விடையளிக்க : 5×2=10

21. வாழ்வான் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.
22. ஐகாரக் குறுக்கத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
23. இனங்குறித்தல் என்றால் என்ன ? எடுத்துக்காட்டு தருக.
24. செம்மை+மொழி எவ்வாறு புணரும் ?
25. வினா எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?
26. முல்லை நிலத்துக்குரிய கருப்பொருள்கள் நான்கனை எழுதுக.
27. வாகைத் திணை என்பது யாது ?

## பிரிவு-III (மதிப்பெண்கள் : 50)

### பகுதி - 1

கீழ்க்காணும் வினாக்களுள் இரண்டனுக்கு விடையளிக்க : 2×5 =10

28. வெண்பாவின் பொது இலக்கணம் யாது ?
29. தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும் - இதில் பயின்றுள்ள அணியை விளக்குக.

(அல்லது)

தற்குறிப்பேற்ற அணியை சான்றுடன் விளக்குக.

30. கீழ்க்காணும் குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு தருக :
காலம் கருதி இருப்பர் கலங்காது
ஞாலம் கருது பவர்.

### பகுதி - 2

எவையேனும் இரண்டனுக்கு ஒவ்வொன்றிற்கும் அரைப்பக்க அளவில் விடையளிக்க : 2×5=10

31. குறட்டை ஒலி கதையின் கருத்தும் பொருளும் மாறாமல் சுருக்கி எழுதுக.
32. எம்.ஜி. இராமச்சந்திரன் பற்றி கட்டுரை வரைக.
33. நூலகத் துறையின் வளர்ச்சியை விளக்குக.

### பகுதி - 3

கீழ்க்காணும் பத்தியில் அமைந்துள்ள ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்க : 3+2=5

34. அ) பாலு பஸ் எத்தனை மணிக்கு வரும்? டிக்கட் கிடைச்சுதா? பஸ் டென் தர்ட்டிக்கு வரும்.
ஆ) பின்வரும் அரபு எண்களைத் தமிழெண்களாக மாற்றுக :
21, 79, 853, 64

35. அ) கீழ்க்காணும் ஆங்கில உரைப்பத்தியை தமிழாக்கம் செய்க : 3+2=5
Trees are very useful to us. They give us timber and firewood. The timber is used to make chairs, tables and other furnitures.

www.Padasalai.Net

ஆ) கீழ்க்காணும் ஆங்கிலப் பழமொழிக்கு இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக :

1. Money makes many things
2. Prevention is better than cure
3. Health is wealth
4. Man proposes, God disposes

## பகுதி - 4

36. கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க : 1x5 =5

அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள கதையை நிறைவு செய்து பொருத்தமான தலைப்பு தருக :
அகிலன் தன் அம்மாவுக்கு வேண்டிய உதவிகளைச் செய்துவிட்டு நடந்தே பள்ளிக்குச் செல்வான். ஒரு நாள் ஓட்டமும் நடையுமாய்ப் பள்ளிக்குச் சென்று கொண்டிருந்தான் அப்போது சாலையில்....

(அல்லது)

ஆ) கீழ்க்காணும் தலைப்பில் எட்டு வரிகளுக்கு குறையாமல் கவிதை ஒன்று எழுதுக :
பள்ளி (அல்லது) முயற்சி

## பகுதி - 5

37. கீழ்க்காணும் பாடலின் திரண்ட கருத்தை எழுதி, அப்பாடலில் அமைந்துள்ள ஏதேனும் ஐந்து நயங்களை எடுத்தெழுதுக : 1x5=5

அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும்நான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேல் சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்சோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான்செயினும் நீபொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாத நிலைமையும்வேண் டுவனே.

- இராமலிங்க அடிகள்

www.Padasalai.Net

## பகுதி-6 1x5 =5

38. வங்கிக் கணக்கிலிருந்து பணம் எடுக்கும் படிவத்தை நிரப்புக

பதித்தவர் பேரேடு நாள்.......................

சேமிப்பு வங்கிக் கணக்கு எண் ......................

.......................... கிளை

நாள் :...................... 20

.................................... வங்கி .................................. எனக்கு அல்லது இதனைக் கொணர்பவருக்கு ரூபாய் ................................ வழங்குக.

ரூ.

கணக்கு வைத்திருப்பவர் கையொப்பம்

www.Padasalai.Net www.TrbTnpsc.com



பகுதி - 7

39.அ) கீழ்க்காணும் வாழ்வியல் சூழலைப் படித்து விடையளிக்க : 3+2=5

மதியழகன் பத்தாம் வகுப்பு படிக்கிறான். மேற்கொண்டு திரைப்படக் கல்லூரியில் சேர்ந்து படிக்க வேண்டும் என்று அவன் விரும்புகிறான். வீட்டில் அவன் பெற்றோரோடு பேசிக் கொண்டிருக்கும்போது தன் எண்ணத்தை வெளியிடுகிறான். அதைக் கேட்டதும், தந்தை அவன்மீது சினம் கொள்கிறார். ஏனெனில் அவன் மிகச் சிறந்த பொறியாளராக வரவேண்டும் என்பது அவருடைய விருப்பம். மதியழகன் தந்தையிடம் எப்படி புரிய வைப்பது என்று தடுமாறுகிறான்.

1. மதியழகன் போல நீங்களும் ஏதேனும் படிக்க முடிவெடுத்துள்ளீர்களா?
2. நீங்களும் உங்கள் தந்தையிடம் உமது விருப்பத்தை கூறுவீர்களா?
3. மதியழகன் அவன் தந்தையை சம்மதிக்க வழியொன்று கூறுங்களேன் ?

ஆ) கீழ்க்காணும் சூழலைப் படித்து விடையளிக்க :

விழி மாற்றுத் திறனாளி ஒருவர் சாலையைக் கடப்பதற்காக நெடுநேரமாகக் காத்துக் கொண்டு இருக்கிறார். அந்த வழியாக பலரும் கடந்து செல்கின்றனர். ஆனால், அவருக்கு உதவ ஒருவரும் முன்வரவில்லை.

1. இதுபோன்றதொரு சூழலில் நீ எவ்வாறு செயல்படுவாய் ?
2. பிறருக்கு உதவுவதால் வெளிப்படும் பண்பு யாது ?

பிரிவு-IV (மதிப்பெண்கள் : 20)

பகுதி - 1

40. கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க : 1x10=10

அ) நும் ஊருக்குப் பேருந்து வசதி வேண்டுமெனப் போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநருக்கு விண்ணப்பம் வரைக.

(அல்லது)

ஆ) பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற உன் நண்பனைப் பாராட்டிக் கடிதம் எழுதுக.

பகுதி - 2

41. கீழுள்ள வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்குக் குறிப்புகளைக் கொண்டு ஒருபக்க அளவில் கட்டுரை எழுதுக. தலைப்பு ஒன்று தருக : 1x10=10

அ) முன்னுரை - காற்று, நிலம், நீர் மாசுபடுதல் - மாசுக் கட்டுப்பாடு - மாணவர் பங்கு - முடிவுரை.

(அல்லது)

ஆ) முன்னுரை - கணினி - தோற்றம் - வளர்ச்சி - இணையம் - இணையதள வசதி - பயன்படுத்தும் துறைகள் - முடிவுரை.

http://www.trbtnpsc.com/2013/07/latest-12th-study-materials-2013.html